# திஹகொட பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

--------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 திசெம்பர் 05 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஜூன் 19 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜனவரி 22 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

-------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான திஹகொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

-------------------------------------------------------------------------------------------------

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளுராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

----------------------------------------

மீளாய்வாண்டிற்கான சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களுடன் அக் கணக்குகள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு மீளாய்வாண்டு தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 39,412 தொகையை செலவு ஒன்று எனவும் ஆண்டு இறுதியின் போது செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,511,710 தொகையினை கடன்கொடுத்தோர்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) நான்கு காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) பலவின கடன்பட்டோர் பட்டோலையின் பிரகாரம் 48 கடன்பட்டோர் மீதிகளின் பெறுமதி ரூபா 82,046,918 தொகை எனினும் உள்ளவாறான கூட்டுத்தொகை ரூபா 81,996,898 என காணப்பட்டமையால் ரூபா 50,020 வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் பொருத்துக்கள் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ஓய்வகக் கட்டிடத்தையும் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இரண்டு நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டியிருந்த ரூபா 449,997 தொகைக்காக கணக்கெடுத்தோர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 45,402 இற்கான ஆயர்வேத மருந்து இருப்பின் பெறுமதி பொதுப் பேரேட்டில் ஆரம்ப மீதியாக காட்டப்படாமையால் வருட இறுதியில் உள்ள இருப்புப் பெறுமதி அதே தொகையால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 88,698,680 ஆகக் காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகள்/ பட்டோலைகளின் பிரகாரம் இந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 83,013,583 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 5,685,097 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.5 தொங்கல் கணக்குகள்

-----------------------------------------

பல வருட காலமாக முன்கொண்டுவரப்பட்டு காணப்படும் தொங்கல் கணக்குகளில் ரூபா 2,382,841 இற்கான வரவு மீதியினை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 62,909,647 ஆகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 694,252 ஆகும்.

1.3.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------

ரூபா 19,329,954 பெறுமதியான 02 கணக்கு விடயங்கள் தொடர்பா சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.8 வங்கிக் கணக்குகள்

--------------------------------------

(I). பொதுக் காசுக் கணக்கு தொடர்பாக 2013 ஜூலை மாதம் முதல் வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரித்திருக்கவில்லை.

(II). 1989 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 554/5 கொண்ட அதி விஷேட வர்த்தமானியின் 5(2) மற்றும் இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 387 ஏற்பாடுகளுக்கு மாற்றமாக 2013 திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு முன் கொண்டுவரப்பட்டுள்ள வங்கி மேலதிகப் பற்றின் பெறுமதி ரூபா 162,542 ஆகும்.

1.3.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| | விதி 218 | காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வோர் ஆண்டிற்கு ஒரு முறையேனும் பரிசோதனை மேற்கொள்வதற்கு தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் 2002/02 கொண்ட திறைசேரி சுற்று நிருபம் | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,548,957 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,346,937 ஆகும்

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| ஏக்கர் வரி | 332 | 146 | 313 |
| வுாடகை | 126 | 1,270 | 326 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 826 | 493 | 53 |
| ஏனைய வருமானங்கள் | 20,442 | 18,217 | 10,376 |

2.2.2 கடை வாடகை

---------------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வாடகையின் பெறுமதி ரூபா 233,395 ஆக காணப்பட்டதுடன் ஆண்டின் போது ரூபா 108,384 தொகையொன்று அறவிடப்பட்டிருந்தமையால் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 46 ஆகும்.

2.2.3 ஏக்கர் வரி

------------------

மீளாய்வாண்டிற்காக ஏக்கர் வரி பில் போடப்பட்டவை ரூபா 2,340 ஆக காணப்பட்டதுடன் 2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை தொகை ரூபா 23,858 ஆகும். 2013 ஆண்டிற்கான பில்போடப்பட்டவைகளில் ஆண்டின் போது கிடைத்துள்ளவை ரூபா 826 ஆக காணப்பட்டதுடன் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 35 ஆகும். 2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை தொகையில் இவ் வருடத்தில் கிடைத்திருந்த தொகை ரூபா 4,227 ஆக காணப்பட்டமையால் அறவீடுகளின் நூற்றிற்கு 17 ஆகிய சிறிய பெறுமதியொன்றைக் கொண்டிருந்தது.

2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 30,376,949 ஆகும்

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 மனித வள முகாமைத்துவம்

-------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணி மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியின் வகைகள் | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 01 | 01 | | |
| மூன்றாம் தர | 02 | 02 | | |
| இரண்டாம் தர | 16 | 16 | | |
| ஆரம்ப தர | 21 | 19 | 02 | |
| ஏனைய(அமைய, தற்காலிக, ஒப்பந்த) | 06 | 10 | | 04 |
| | 46 | 48 | 02 | 04 |

மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து பதவியணி சம்பளம் மந்திரிமார் படி ஆக ரூபா 8,167,400 மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது ரூபா 11,306,854 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சபை நிதியத்திற்கு ரூபா 3,139,454 இற்கான மேலதிக செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டுள்ளது.

4. கணக்கீட்டுத் தன்மையும் நல்லாட்சியும்

4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

சபை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவியிருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு வருமானம் மற்றும் செலவுகள் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்